# கலந்துரையாடல் கேள்விகள்: தர்ம ரதம்

கதையில் உள்ள பல்வேறு கருப்பொருள்களை தனியாகவோ குழுவாக விவாதித்து ஆராயவோ உதவும் சில கேள்விகள் இங்கே!

1. கதையில் ஜமாலிடம் துணியை விற்றபோது பழனியப்பனுக்கு வயது என்ன?

2. பழனியப்பன் அவருக்கும் ஜமாலுக்கும் இடையிலான நட்பிற்கும் நம்பிக்கைக்கும் புறம்பாக குறைபாடுள்ளத் துணியை விற்கலாமா என்பது குறித்து முடிவெடுக்க வேண்டியிருந்தது. பழனியப்பனைப் போல நட்பும் விசுவாசமும் சோதிக்கப்படும் நிலையில் நீங்கள் எப்போதாவது ஒரு முடிவை எடுக்க வேண்டியிருந்ததா?

3. பழனியப்பனுக்கும் சிவசுக்கும் இடையிலான வேறுபாடுகள் (அவர்களின் குணங்கள், ஆளுமை ஆகியவற்றின் அடிப்படையில்) குறித்து கதை என்ன வெளிப்படுத்துகிறது? அவர்களின் உறவை எவ்வாறு விவரிப்பீர்கள்?

4. 1990-களுக்கு முன்னர், பழனியப்பனின் செழிப்பு, சிங்கப்பூருக்குத் தங்கள் வணிகத்தை கொண்டு வந்த ஜப்பானிய விற்பனையாளர்களுக்கு முகவராகப் பணி புரிந்ததின் மூலம் வந்தது. பழனியப்பனின் வணிகம் செழித்துக் கொண்டிருந்தபோது சிங்கப்பூர் எப்படி இருந்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? “ஆ! அந்த நேரங்கள் போய்விட்டன.” என்று சிவாசு புலம்பும்போது, அவருடைய உணர்ச்சிகளை உங்களால் உணரமுடிகிறதா?

5. கதை எவ்வாறு இடத்தை பற்றிய விவரங்களை அளிக்கிறது? நீங்கள் சுவாரஸ்யமாகக் கருதிய விவரங்கள் யாவை? கதையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகளையும் இடங்களையும் நீங்கள் கேள்விப்பட்டதுண்டா?

6. பழனியப்பனின் மனைவி ஹேமலதா மட்டுமே தங்கள் மகன் ராம்குமாரின் திருமணத்தில் கலந்து கொண்டார். பழனியப்பனுக்கும் தனது மகனுக்கும் இடையிலான உறவைப் பற்றி இது என்ன வெளிப்படுத்துகிறது?

7. பழனியப்பன் தான் பயன்படுத்தாத கணினியை ஏன் வைத்திருக்கிறார்?

8. கதையில் உரையாடல் குறைவாகவும் பழனியப்பனுக்கும் சிவாசுக்கும் இடையிலான நீண்ட மௌனங்களுடனும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. இப்படி கதையில் வெளிப்படையாகக் கூறப்படாதவற்றின் தாக்கம் என்ன?

9. துணியை விற்பனை செய்த பணத்தைப் பழனியப்பன் செலவிடவில்லை. அது அவரது இறப்பின் பிறகு 10 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாமல் அவரது மகன் ராம்குமாரால் கண்டுபிடிக்கப்பட்டது. கதையின் முடிவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இது ராம்குமாரின் பார்வையிலிருந்து ஏன் கூறப்பட்டது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

10. பழனியப்பன் வாடகையை இறுதியில் எப்படிச் செலுத்தினார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

11. பழனியப்பன், ஜமால் இவர்களுக்கு இடையிலான நட்பு இறுதியில் பழுதடைந்த துணி விற்பனையால் எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பதைக் கதை கூறவில்லை. என்ன நடந்திருக்கும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

12. கதையில் வேறு எந்தெந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்படவில்லை? அல்லது கதையில் வேறு எந்தெந்தப் பகுதிகள் தெளிவாக விளக்கப்படவில்லை?

13. ஒரு முறை கூட பொய் பேசாத மன்னர் யுதிஷ்திரரை மகாபாரதம் சித்தரிக்கிறது. அவரது நேர்மையின் காரணமாக, அவரது தேர் போர்க்களத்தில் கூட தரையைத் தொடவில்லை. எதிர்பாராதவிதமாக இறுதிப் போரின்போது, அவர் தனது மக்களைக் காப்பாற்ற பொய் கூற வேண்டிய நிலை ஏற்பட்டதால் அவரது தேர் பூமிக்கு விழுந்தது. மகாபாரதத்தில் இடம்பெற்றுள்ள இந்தப் பகுதிக்கும் இந்தக் கதைக்கும் உள்ள ஒற்றுமை என்ன?